சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 19/2018

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திருமதி. அமுதா<br>க /பெ. கிருஷ்ணமூர்த்தி | நாள் 11.12.2024 |
| வயது. 48 | தொழில் |
| கிராமம். ஓணம்பட்டு | வட்டம். |

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் மனுவில் 6 ம் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கைமற்றும் புகாரின் சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.1.** என் தகப்பனாரின் பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்றிட்ட நகல் மற்றும் இறப்பு அறிக்கை **ம.த.சா.ஆ.2 மற்றும்** 3. பதிவு சான்றிதழ் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் நகல்கள் **ம.த.சா. ஆ. 4 மற்றும் 5**. என் தகப்பனார் சென்ற வாகனத்தின் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் **ம.த.சா.ஆ.6**. குற்ற இறுதி அறிக்கை **ம.த.சா.ஆ.7**. என் தகப்பனார் சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **ம.த.சா.ஆ–.8**. 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.த.சா.ஆ.9. குற்ற வழக்கில் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் **ம.த.சா.ஆ.10**. 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் **ம.த.சா.ஆ–11**. எங்களின் ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகங்களின் நகல்கள்( அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.த.சா.ஆ.12 முதல் 29**. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாரின் தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் காரில் சென்னையில் இருந்து விழுப்புரம் நோக்கி சென்றார் என்றால் சரிதான். அந்த கார் டேங்கர் லாரியின் பின்புறம் மோதியதாக ம.த.சா.ஆ. 1 ல் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. புகார் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ம.த.சா.ஆ.1ல் அடையாளம் தெரியாத வாகனம் மீது மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. ம.த.சா.ஆ.10ன் படி சாலையின் இடது ஓரம் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ம.த.சா.ஆ.1ன் படி விபத்து அதிகாலை 3.15க்கு ஏற்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். காரை திருமணத்திற்கு முழுவதும் சேகர்தான் ஓட்டினார் என்றால் இல்லை. மணப்பெண் மற்றும் மணமகனை அழைத்து வந்தார். அவர் தொடர்ச்சியாக ஒருநாள் முழுவதும் ஓட்டினார் என்றால் சரியல்ல. அவர் தொடர்ச்சியாக காரை ஓட்டி தூக்க கலக்கத்தில் முன்னால் சென்ற வாகனம் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. சாலைகள் விதிகள் படி காரை உரிய இடைவெளி இல்லாமல் லாரியை முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து காரை ஓட்டிச் சென்ற ஓட்டுநரால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இனோவா கார் உரிமையாளர், காப்பீட்டாளர் மற்றும் ஓட்டுநரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.8ன் படி காருக்கு அதிக சேதம் என்றால் சரியல்ல.

4. லாரியின் பின்புறம் சிறிய சேதம்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் விபத்து ஏற்பட்டிருந்தால் லாரிக்கு தான் பெரிய சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநர் மீது எவ்வித தவறும் இல்லை

என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் தர கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 9 முதல் 11 மனுதாரர்கள் இறந்துபோன மண்ணாங்கட்டியின் வாரிசுகளாக வரமாட்டார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் நஷ்ட ஈடு பெற இயலாது என்றால் சரியல்ல. அவர்களைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.